MCOP.No. 92/2019
Date : 21.07.2025
Witness Name & Rank – மோகன்ராஜ் – PW1

சாட்சி அழைக்கப்பட்டு 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்

1. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் எட்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். மேற்படி வழக்கில் புகார் யார் கொடுத்தது என்றால் எனது உறவு முறை அண்ணன் சந்தோஷ் என்பவர் கொடுத்தார். எங்களது முதல் தகவல் அறிக்கை படி காவல்துறையினர் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. எதனால் எனக்கு தெரியாது என்றால் நான் அதன் பிறகு சிகிச்சையில் இருந்ததால் நான் அதை கவனிக்கவில்லைஇந்த வழக்கில் இறுதி அறிக்கை மாதிரி வரைபடம் பார்வை மார்ஜர் போன்ற எந்த விதமான குற்ற ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் மேற்படி ஆவணங்கள் தாக்கல் செய்யாததற்கு ஏதேனும் குறிப்பிட்ட காரணம் உள்ளதா என்றால் எதுவும் இல்லை. மேற்படி விபத்து நடந்த இடம் எந்த சாலை என்றால் மாதப்பூர் சாலை ஆகும்.
2. மேற்படி சாலை தென்வடல் சாலை ஆகும். மேற்படி விபத்து சமயத்தில் நான் ஓட்டிச் சென்ற வாகனம் யாருடையது என்றால் எனது பெரியப்பா மகனுடையதாகும். மேற்படி வாகனத்தை ஓட்ட ஓட்டுனர் உரிமம் எனக்கு உள்ளதை காட்ட இந்த வழக்கில் அந்த ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.நான் ஓட்டி சென்ற வாகனத்தின் ஆய்வறிக்கையின் படி விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என மோட்டார் வாகன குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். எனவே நான் சொல்வது போல் எனக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றும் அதனால் தான் மோட்டார் வாகன ஆய்வாளர் எனது ஓட்டுநர் உரிமம் இல்லை என தெளிவாக ஆய்வு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ–3 காயச்சான்றிதழின்படி மருத்துவர் விசாரணையில் நான் இருசக்கர வாகனத்தில் சென்ற போது நான்கு சக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்படுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.
3. மேற்படி விபத்து முடிந்த பிறகு எனக்கு உரிய ஓட்டுனர் உரிமம் இல்லை என்றும்

தலைக்கவசம் நான் விபத்து சமயத்தில் அணியவில்லை என்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களால் எனக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான் ஆனால் நான் தலைக்கவசம் அணிந்திருந்தேன். நான் இழப்பீடிற்காக தலை கவசம் அணிந்ததாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்லநான் தென்வடல் சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி பயணித்தேன் என்றால் சரிதான். என் மீது மோதிதாக சொல்லப்படும் வாகனம் எங்கிருந்து எங்கு வந்தது என்றால் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்தது. நான் தென்வடல் சாலையில் இடது புறம் ஓரத்தில் சென்றதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். எனவே எனது கூற்றின்படி மேற்குறிய விபத்தானது தென்வடல் சாலையில் மேற்கு புறம் நடந்திருக்க பட வேண்டும் என்றால் சரிதான். காவல்துறையினர் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் மேற்கூறிய விபத்தானது மேற்கு புறம் நடைபெறாமல் தென்படல் சாலையில் கிழக்கு புறம் நடைபெற்றது எனவே தான் மேற்படி ஆவணத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. எனவே தான் காவல் புலன் விசாரணை அதிகாரி எங்களது முதல் தகவல் அறிக்கையில் எனக்கு எதிராக இதச பிரிவு 279 எனில் இறுதி அறிக்கை தாக்கல் செய்து உள்ளார் என்றும் எனவேதான் அந்த இறுதி அறிக்கையின் நகலை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல எனவே மேற்குறி விபத்தான புலன் விசாரணை அதிகாரியால் இறுதி அறிக்கையை தாக்கல் செய்யப்பட்டு குற்ற வழக்கு இறுதி செய்யப்பட்டது என்றால் சரியல்ல எனவே இரண்டாவது எதிர்மனுதாரரின் கார் அதன் உரிய திசையில் வந்து வந்துள்ளது என்றும் எனது கவனக்குறைவால் தான் மேற்கூறிய விபத்து நிகழ்ந்துள்ளது என்றும் எனவே மூன்றாவது எதிர்மனுதாரோ அல்லது இரண்டாவது எதிர்மனுதாரரோ இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. எனது பணி சான்றோ சம்பளச் சான்றோ எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் நெசவு வேலை செய்வதாகவும் மாதம் ரூபாய் 25000 சம்பாதிப்பதாகவும் எடுத்துக்காட்ட எந்த விதமான ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

5. ஆனால் அந்த தொழில்தான் செய்து வருகிறது. நான் இழப்பீடு வழக்குக்காக மிகைப்படுத்தி எனது காயத்தையும் மருத்துவ செலவையும் குறிப்பிட்டுள்ளேன்

என்றால் சரியல்ல. மேற்படி மருத்துவச் சான்றிதழிலும் நான்கு சக்கர வாகனத்திலும் நான் தான் வாகனத்தின் மீது மோதியதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ– 5 ஐந்து மருத்துவ பில்கள் வழக்கத்திற்காக உருவாக்கப்பட்டவை என்றால் தெரியவில்லைஎனது இழப்பீடு மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல எனது கவனக்குறைவால் விபத்து ஏற்படுத்தி அவ்வாறே புலன் விசாரணை அதிகாரியால் இறுதி அறிக்கையை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மூன்றாவது எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றும் எனவே எனது இழப்பீடு மனுவானது முழுவதுமாக தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. அனைத்து சங்கதிகளையும் தெரிந்து கொண்டு நான் எனது மனுவிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியில்லை.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(SD/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.